**சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்**

**கூடலூர் நகராட்சியில் மே மாதம் (29.05.2020) ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 04/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவுசெய்யலாம்.

**தீர்மான எண்.919, பதிவு செய்யப்பட்டது**

**பொருள்.2**

கூடலூர் நகராட்சியில் **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம்** 2020–21 ன் கீழ் மழை மற்றும் இயற்கை சீற்றங்களினால் சேதமடைந்த சாலைகளை சீரமைத்திட ரூ.200.00 இலட்சத்திற்கு தயார் செய்யபட்ட விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.மேலும் மதிப்பீட்டு தொகை ரூ.200.00 இலட்சமும் முழு மான்யமாக வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.கஎண்.929/2020/இ1)**

| வ. எண் | பணியின் பெயர் | நீளம் (மீட்டர்) | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | **சிப்பம் எண்-1** | | |
| 1. | கூடலூர் நகராட்சி வார்டு எண் 7,விதைப்பண்ணை சாலை, வார்டு எண் 8,10 இராஜா கிணற்றுதெரு, வார்டு எண் 12,மேதாகாரர் தெரு, வார்டு எண் 13,கப்பாமடை சாலை, வார்டு எண் 15,கன்னிகாளிபுரம் மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள் மற்றும் வார்டு எண் 19,வடக்கு ரத வீதி ஆகிய தெருக்களில் சி.எம்.பி. முறையில் தார்ச்சாலை அமைத்தல். | 4862.00 | 200.00 |
| | **மொத்தம்** | **4862.00** | **200.00** |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மதிப்பீட்டு தொகை ரூ.200.00 இலட்சமும் முழு மான்யமாக வழங்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பலாம்

**தீர்மான எண்.920,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.3**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உலகளாவிய தொற்று நோயான கொரோனா வைரஸ் தொற்று நோயினை தடுப்பதற்காக லைசால், சோடியம் ஹைபோ குளாரைடை நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து தெருக்களிலும் தெளிக்கும் பொருட்டு (Honda Motor) உபயோகப்படுத்தி வருவதால் அதனுடைய ஒஸ் அறுந்து விட்டதால் அதனை பழுது நீக்கம் செய்ய இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளர் திரு.ரா.ரவிச்சந்திரன் அவர்களால் செலவுகள் மேற்கொள்ளப்பட்டதால் அன்னாரால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் உள்ள தொகை ரூ.16125/– ஐ அன்னாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.296/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.921,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சியில் 2020–21ம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் **ரூ.285.00** இலட்சத்திற்கு கீழ்கண்டவாறு மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட மதிப்பீடுகள்

தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடும் வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | வார்டு எண்-5ல் உள்ள அருந்ததியர் ஓடையில் 0 மீட்டர் முதல் 200 மீட்டர் வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 95.00 |
| 2 | வார்டு எண்-5ல் உள்ள அருந்ததியர் ஓடையில் 200 மீட்டர் முதல் 400 மீட்டர் வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 95.00 |
| 3 | வார்டு எண்-6ல் உள்ள அருந்ததியர் ஓடையில் 400 மீட்டர் முதல் 600 மீட்டர் வரை மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால் அமைத்தல் | 1 | 95.00 |
| | **மொத்தம்** | **3** | **285.00** |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மதிப்பீட்டு தொகை ரூ.285.00 இலட்சத்திற்கும் முழு மானியமாக நிதி ஒதுக்கீடு வேண்டி கருத்துரு அனுப்பலாம்.

**தீர்மான எண்.922,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-5 நகராட்சி பொது மயானத்தினுள் அமைந்துள்ள நுண் உரம் செயலாக்க மையத்தினுள்ள தொட்டிகளை பராமரிப்பு செய்து மயானத்தின் மேற்கு பகுதியில் நுண் உரம் செயலாக்க மையம் உட்பபுறம் 6" pvc பைப்லைன் அமைத்திட ரூ.1,10,000/-க்கு தயார் செய்த மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.97/2020/இ1)**

<u>அலுவலக குறிப்பு.</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.923,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.6**

கூடலூர் நகராட்சிப்பகுதியானது மேலக்கூடலூர், கீழக்கூடலூர், லோயர்கேம்ப் ஆகிய மூன்று ஊர்களை இணைத்து 21 வார்டுகளை கொண்ட 32 சதுர கிலோ மீட்டர் பரப்பளவுள்ள இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி தேசிய நெடுஞ்சாலையில் தமிழகம் மற்றும் கேரளத்தின் எல்லைப்பகுதியில் அமைந்துள்ள சுற்றுலா தளமாக இருப்பதால் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தினமும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்கள் இந்நகராட்சி பகுதிக்குள் வந்து செல்கிறார்கள். இந்நகராட்சி பகுதியினை சுற்றி உள்ள கிராமங்களிலிருந்து தங்களின் குழந்தைகளின் கல்விக்காவும்,பணி நிமித்தமாகவும் இந்நகராட்சி பகுதிக்கு தினம் பொதுமக்கள் வந்து செல்கின்றார்கள்.மேலும் அய்யப்பன் கோவில் திருவிழா மற்றும் மிகவும் பிரசித்தி பெற்ற சித்ராபௌர்ணமி மங்கள தேவி கண்ணகி கோவில் திருவிழாவிற்கு இந்தியா மற்றும் வெளிநாடுகளிலிருந்தும் இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றனர். அனைத்து பொதுமக்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கு கம்பம் பள்ளத்தாக்கு கூட்டு குடிநீர் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் குடிநீர் மேல்நிலை தொட்டிகளை பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு செய்வதற்கும்,நகரில் பொதுமக்களின் நலன் கருதி துப்புரவு பணிகளை மேற்கொள்ளவும்,அலுவலகத்திற்கு வரும் தபால்களை உரிய பதிவேடுகளில் பதிவு செய்தும் ஆவண காப்பகத்தில் உள்ள ஆவணங்களை முறையாக பாதுகாப்பதற்கும்,பொறியில் பிரிவில் நடைபெறும் குடிநீர் விநியோகம் மற்றும் திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொள்ளவும் போதிய பணியாளர்கள் இல்லை இதன் காரணமாக துப்புரவு பணி மற்றும் குடிநீர் விநியோக பணிகள் திட்டப்பணிகளில் தொய்வு ஏற்படுகிறது.

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் குடிநீர் விநியோகப்பணிகள் மற்றும் திட்டப்பணிகளை ஆய்வு செய்வதற்கு திட்டப்பணிகள் மேற்கொள்வதற்கான கருத்துரு தயார் செய்யவும்

பணி ஆய்வர் பணியிடம் முக்கியமானதாகும் எனவே இப்பணியிடத்தை பூர்த்திசெய்வது அவசியமாக உள்ளது.

இந்நகராட்சிக்கு பொதுமக்கள் மற்றும் பிற துறை அலுவலகத்திற்கு வரும் தபால்களை உரிய பதிவேடுகளில் பதிவு செய்து சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அனுப்புவதற்கும் கூடலூர் நகராட்சி 32 சதுர கிலோ மீட்டர் கொண்ட நகராட்சியாக இருப்பதால் நகராட்சி சம்மந்தப்பட்ட மூல ஆவணங்களை ஆவண காப்பகத்தில் பாதுகாக்கவும் பதிவறை எழுத்தர் பணி முக்கியமான பணியிடமாக இருப்பதாலும் மேற்படி பணியிடம் கடந்த ஒன்றரை வருடங்களுக்கு மேலாக காலியாக உள்ளதால் மேற்படி பணியிடத்தினை பூர்த்தி செய்ய அவசியமாக உள்ளது.

இந்நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு கம்பம் பள்ளத்தாக்கு கூட்டு குடிநீர் திட்டம் மூலமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நேரடியாக விநியோக்கிப்பட்டு வருவதால் மேல்நிலை தொட்டிகளுக்கு வரும் குடிநீரின் அளவினை கணக்கீடு செய்யவும் குடிநீர் மேல்நிலை தொட்டிகளை பாதுகாப்பது மற்றும் பராமரிப்பு செய்வதற்கும் மின் மோட்டார் ஓட்டுவது இந்நகராட்சி பகுதியில் உள்ள பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகள் திறப்பது போன்ற இன்றியமையாதப்பணிகளை மேற்கொள்ள குழாய் பொருத்துனர் பணியிடம் அவசியமான ஒன்றாக இருப்பதால் இப்பணியிடத்தினை பூர்த்தி செய்ய அவசியமாக உள்ளது.

இந்நகராட்சி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்கு கம்பம் பள்ளத்தாக்கு கூட்டு குடிநீர் திட்டம் நடைமுறைபடுத்தப்பட்டு வருவதால் தற்பொது கொரோனா பாதுகாப்பு தொடர் நடவடிக்கை மேற்கொண்டு வருவதால் குடிநீர் மேல்நிலை தொட்டிகளை பாதுகாப்பது மற்றும் பராமரிப்பு செய்வதற்கு முறையான உடற்தகுதி கொண்ட தண்ணீர் தொட்டி பாதுகாவலர் பணியிடம் முக்கியமானதாகும் எனவே இப்பணியிடம் தொடர்ந்து 4 வருடங்களாக காலியிடமாக இருந்து வருவதால் இப்பணியிடத்தை பூர்த்தி செய்வது முக்கியமானதாகும்.

இந்நகராட்சியில் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் போர்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.இந்நகராட்சியில் துப்புரவு பணியாளர்கள் தோற்றுவிக்கப்பட்ட பணியிடம் 55 ஆகும்.இந்நகராட்சியில் உள்ள 21 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகள் சேகரித்து மக்கும் குப்பை மற்றும் மக்கா குப்பைகளை பிரித்து உரமாக்கும் பணிகள் நடைபெற்று வருவதால் தூய்மை பணியாளர் பணியிடம் மிகவும் அவசியமாக உள்ளது. மேற்படி காலி பணியிடத்தை பூர்த்தி செய்ய அவசியமாக உள்ளது.

தற்போது நிதித்துறை அரசாணை எண்.248 நாள்.20.05.2020 அரசாணையில் புதிய பணியிடங்கள் தோற்றுவிப்பதற்கு தடைவிதித்தும், ஏற்கனவே உள்ள காலிப்பணியிடங்களை பூர்த்தி செய்ய பணியாளர் குழு அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே கீழ்கண்டுள்ள பணியிடங்களை பூர்த்தி செய்து கொள்ள மேற்கண்ட அரசாணையிலிருந்து விலக்களிக்கவும் கீழ்காணும் காலிப்பணியிடங்களை நிரப்ப அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு உரிய கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. **(ந.க.எண்.220/2019/சி1)**

| வ.எண் | காலிபணியிடத்தின் பெயர் | காலிபணியிடத்தின் எண்ணிக்கை | பணியிடம் காலியேற்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | தண்ணீர் தொட்டி பாதுகாவலர் | 1 | 01.02.2017 |
| 2. | பதிவறை எழுத்தர் | 1 | 22.11.2018 |
| 3. | குழாய் பொருத்துனர் | 1 | 01.06.2019 |
| 4. | பணி ஆய்வர் | 1 | 08.11.2019 |
| 5. | தூய்மை பணியாளர் | 1 | 01.04.2020 |

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.924,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.7

கூடலூார் நகராட்சி வார்டு எண்-8,காந்தி கிராமம் நடுத்தெரு, இராஜா கிணற்று தெரு சந்திப்பு மற்றும் நடுத்தெரு, கே.பி காமாராஜ் தெரு சந்திப்பு ஆகிய இரண்டு இடங்களில் உள்ள சேதமடைந்த இரண்டு சிறு பாலங்களையும் புதிதாக அமைத்திட ரூ.95,000/-க்கு தயார் செய்த மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.930/2020/இ1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.925,அனுமதிக்கப்பட்டது**

பொருள்.8

கூடலூார் நகராட்சியில் 2018-19 ஆம் ஆண்டு O&M Gap Filling Fund ன் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் செயல்படுத்தபட்டு வரும் குடிநீர் அபிவிருத்தி திட்டபணிகள் குறித்த விளம்பரத்தினை ACCORD ADVERTISING AGENCIES மூலம் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணம் ரூ.2,70,346/-ஐ வழங்குமாறு நிர்வாக பொறியாளர் த..கு.வ.வாரியம், கி.கு.தி.கோட்டம் தேனி அவர்களின் கடித எண்.கோ.விளம்பரக்கட்டணம்/இ.நி.உ/கிகுதி/தேனி/2020 நாள்.24.03.2020ன்படி கடிதம் வரப்பெற்றுள்ளது. எனவே குடிநீர் அபிவிருத்தி திட்டபணிகள் குறித்த ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை விளம்பரம் செய்தமைக்குரிய பட்டியல் தொகை ரூ.2,70,346/-ஐ நிர்வாக பொறியாளர் த..கு.வ.வாரியம், கி.கு.தி.கோட்டம் தேனி அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.. **(ந.க.எண்.1663/2018/இ1)**

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

**தீர்மான எண்.926,அனுமதிக்கப்பட்டது**